## 11.9 2000–2001 ஆம் ஆண்டிற்கான சமன்பாடு மற்றும் ஊக்க நிதியை பகிர்ந்தளிப்பதற்காக ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் அளித்தல்

ஊரக வளர்ச்சி (சி 2) துறை

அரசாணை (நிலை) எண் 304 நாள் : 24.11.2000

படிக்க :

1. அரசாணை (நிலை) எண். 154, ஊ.வ (சி2) துறை நாள் 21.6.2000.
2. அரசாணை (நிலை) எண் 280, ஊ,வ (தி3) துறை நாள் 27.10.2000.
3. ஊரக வளர்ச்சி இயக்குநரின் நே.மு.க எண் 36044/2000/ஊ,அ.(ம) தி1., நாள் 13.10.2000.

**ஆணை**

ஊரக வளர்ச்சி துறையின் அரசாணை (நிலை) எண் 154 நாள் 21.6.2000– ல் 2000–2001–ம் ஆண்டிற்கு சமன்பாடு மற்றும் ஊக்க நிதியாக ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.93,2777 கோடி ஒதுக்கீடு செய்து அணை வெளியிடப்பட்டது. இந்த ஒதுக்கீட்டை மாற்றி ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு கீழ்க்கண்டவாறு மாற்று மறு ஒதுக்கீட்டை வழங்குவதற்கும், இதற்கான அதிகாரத்தை அவருக்கு அளிக்குமாறும் அரசினை கோரியுள்ளார்.

| அமைப்புகள் | கிராம ஊராட்சிகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | மாவட்ட ஊராட்சிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. 1 அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பிற பணிகள்<br>(அ) ஊராட்சிகளிடையே உள்ள கட்டமைப்பு வசதிகளில் சமன்பாடு ஏற்படுத்தவும் நலிவுற்ற ஊராட்சிகள், சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த ஊராட்சிகள், முக்கிய நகரங்களை ஒட்டிய ஊராட்சிகள், இயற்கை சீற்றத்தால் பாதிப்பு ஏற்பட வாய்புள்ள கடலோர மற்றும் மலைப் பகுதி ஊராட்சிகளில் போதிய அடிப்படை வசதிகள், குடிநீர், தெருக்கள் மேம்பாடு வடிகால் வசதி, சந்தைகள் மேம்பாடு போன்றவற்றை ஏற்படுத்த ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சமன்பாட்டு நிதி உதவி | 7.15 | 8.7172 | – | 15.8672 |
| ஆ) 2000 புதிய தெரு விளக்குகள் அமைத்தல் 2000 குழல் விளக்குகளை சோடியம் விளக்குகளாக மேம்பாடு செய்தல<br>தமிழ்நாடு மின் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகை | 8.8100<br>5.4263 | –<br>– | –<br>– | |
| | 14.2363 | – | – | 14.2363 |
| 1.2 வருவாய் குறைவான ஊராட்சி ஒன்றியங்கள் நிர்வாக செலவை மேற்கொள்ள இயலாத நிதி இடைவெளியை ஈடு செய்ய நிதியுதவி 20 ஊராட்சி ஒன்றியங்களுக்கு தலா ரூ.10 இலட்சம் வீதம் | | 2.0 | | 2.0000 |
| 1.3 குடிநீர் வழங்கல் மற்றும் பணி பராமரிப்பிற்காக ஊராட்சி ஒன்றியங்களின் கைப்பம்பு பொருத்துநர்கள் மற்றும் பொருத்துநர்களைக் கொண்டு சுழல்நிதி ஏற்படுத்தி தொழில்நுட்ப சேவைக்குழு அமைத்தல் | 2.85 | | | 2.8500 |

| | | | | |
|---|---|---|---|---|
| 1.4 பெரியர் நினைவு சமத்துவபுரங்களில் அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளைஏற்படுத்துதல் | 4.6531 | – | – | 4.6531 |
| 2. ஊக்க நிதி<br>2.1 100 விழுக்காடு வீட்டு வரி வசூல் செய்யும் ஊராட்சிகளுக்கு ஒரு ரூபாய் வசூலுக்கு 3 ரூபாயும், 80 விழுக்காட்டிற்கு மேல் வீட்டு வரி வசூல் இருந்தால் 2 ரூபாயும், 80 விழுக்காட்டிற்கு குறைவாக வீட்டுவரி வசூல் இருந்தால் ஒரு ரூபாய் வரி வசூலுக்கு ஒரு ரூபாயும் வரி வசூலுக்கு ஒரு ரூபாயும் ஊக்க நிதியாக வழங்குதல் | 45.9911 | – | – | 45.9911 |
| 2.2 புதியதாக சமத்துவ மயானம் அமைக்கும் ஊராட்சிகளுக்கு தலா ரூ.1.50 இலட்சம் ஊக்க நிதி வழங்குதல் (1.50 x 180) | 2.70 | – | – | 2.7000 |
| 2.3 1999–2000 ஆண்டு சிறப்பாக பணியாற்றிய உள்ளாட்சி அமைப்புகளை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறந்தமூன்று ஊராட்சிகள், மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாநிலஅளவில் சிறந்த மூன்று ஊராட்சிகள், மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மூன்று மாவட்ட ஊராட்சிகள் என தேர்வு செய்து, அந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள ஊக்க நிதி வழங்குதல். | 0.55 | 1.09 | 0.18 | 1.8200 |
| 2.4 பழுதடைந்த 84 சமையல் அறைக் கட்டிடங்கள் 1529 சத்துணவு மையம் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்ட மைய கட்டிடங்களை பழுது பார்த்தல் | – | 3.16 | – | 3.16 |
| **மொத்தம்** | **78.1305** | **14.9672** | **0.18** | **93.2777** |

ஊரக வளர்ச்சி இயக்குநர் மேலே கூறப்பட்டுள்ள இனம் 1.1 (அ)–ல் கண்டுள்ள தொகையினை ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களின் அடிப்படை வசதிகள் செய்ய மாவட்ட ஆட்சித்தலைவரிடமிருந்து முன் மொழிவுகளைப் பெற்று நிதி ஒதுக்கீடு செய்யவும், இனம் 1.1 (ஆ) வில் உள்ள தொகையை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தவும், இனம் 1.2ல் உள்ள தொகையினை மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து முன் மொழிவுகள் பெற்று வழங்கவும், 1.3ல் உள்ள தொகையினை பெற்று மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மூலமாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கவும், இனம் 1.4ல் உள்ள தொகையை மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மூலம் ஊராட்சிகளுக்கு வழங்கவும், இனம் 2.1ல் உள்ள ஊக்க நிதியினை 1999–2000–ம் ஆண்டு ஊராட்சிகளில் வீட்டு வரியாக 100 சதவீதம் வரி வசூல் செய்த ஊராட்சிகளுக்கு ஒரு ரூபாய் வசூலுக்கு மூன்று ரூபாயும், 80 சதவீதத்திற்கு மேல் வரி வசூல் செய்த ஊராட்சிகளுக்கு ஒரு ரூபாய் வரி வசூலுக்கு 2 ரூபாயும், 80 சதவீதத்திற்கு குறைவாக வரி வசூல் செய்த ஊராட்சிகளுக்கு ஒரு ரூபாய் வரி வசூலுக்கு ஒரு ரூபாயும், ஊக்க நிதியாக ஊராட்சிகளுக்கு மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து வரும் முன்மொழிவுகள் அடிப்படையில் வழங்கவும், இனம் 2.2 ல் உள்ள தொகையை கிராம ஊராட்சிகளுக்கும். இனம் 2.3 ல் ஊரக வளர்ச்சித் துறையின் 1.6.99 நாளிட்ட அரசாணை எண் 97–ல் வெளியிடப்பட்ட ஆணைக்கிணங்க 1999–2000 ஆம் ஆண்டில் சிறப்பாக பணி புரிந்த ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சிகளுக்கு தொகையை வழங்குவதற்கும் இனம் 2.4 ல் உள்ள தொகையை ஊராட்சி ஒன்றியங்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து முன்மொழிவுகள் பெற்று வழங்கவும் அதிகாரம் வழங்கும்படி கோரியுள்ளார்.

2. ஊரக வளர்ச்சி இயக்குநரின் முன் பத்தியில் குறிப்பிட்டுள்ள கருத்துருவை அரசு கவனமாக ஆராய்ந்தது. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவை அரசு எற்று முன்பத்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ளவாறு சமன்பாடு மற்றும் ஊக்க நிதியை பகிர்ந்தளிப்பதற்கு அரசு அதிகாரம் அளித்து ஆணையிடுகிறது.

3. இந்த அரசாணை நிதித் துறையின் அ.சா. எண் 3761/FS/P/2000. நாள் 13.11.2000ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்